

# பயங்கர நகரம்

சங்கர்லால், ஒரு துப்பறியும் சிங்கம். அவருடைய மூளை, பல இலட்ச ரூபாய்களுக்கு இன்ஷூர் செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய மூளை நுட்பமானது. அதிசயமானது. ஒருவன் மனத்தில் உள்ள எண்ணங்களை எவராலும் சொல்ல முடியாது. ஆனால், சங்கர்லால் கேட்கும் பத்துக் கேள்விகளுக்கு அந்த மனிதன் பதில் சொன்னால் போதும்; சங்கர்லால் அந்தப் பதில்களை மட்டும் வைத்து, அந்த மனிதனின் மனத்தில் உள்ள எண்ணங்களை அப்படியே சொல்லிவிடுவார்! அது மட்டுமல்ல, அவன் செய்திருக்கும் குற்றங்களையும் சொல்லிவிடுவார். அவர் கேள்விகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கொக்கிகள். அந்தக் கொக்கிகளை அவர் போட்டால், அத்தனை விஷயங்களும் அதிலே மாட்டிக்கொண்டு வந்துவிடும்! அவ்வளவு அபார மூளை படைத்தவர்!

அரசாங்கத்தார், அவரைப் பெரிய சொத்தாக மதித்து, கோஹினூர் வைரத்தைப் போலக் காத்து வருகிறார்கள். அவருக்கென்று, அவர் இஷ்டப்படி, அவர் போட்டுக் கொடுத்த பிளான்படி, பெரிய பங்களா ஒன்று கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 25,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அவருடைய மலையாளச் சமையல்காரன், அவர்அந்தரங்க வேலையாள் மாது, அவர் மெய்க்காவலன் சிங், மற்றும் சில வேலைக்காரர்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தாரே வேண்டிய வசதிகளுடன் சம்பளம் கொடுக்கிறார்கள். சங்கர் லாலுக்கு சர்க்காரால் ஹட்ஸன் கார் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர் பங்களா வாசலில், இரண்டு கான்ஸ்டபிள்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் நின்றுகொண்டிருப்பார்கள். இதைத் தவிர, அவருக்கு வேறு எந்தப் பாதுகாப்பும் கிடையாது. சங்கர்லாலைப் பற்றித் தெரிந்துகொண்டவர்கள், அவருக்கு இந்தப் பாதுகாப்புப் போதுமா என்று ஆச்சரியப்படுவார்கள். அரசாங்கத்தாரும் இந்தப் பாதுகாப்பு, அவருக்கு எந்த மூலைக்கு என்றுதான் நினைத்தார்கள். ஆனால், சங்கர்லால்தான், "போதும், போதும். இதுவே அதிகம். சங்கர்லாலைக் கொன்றுவிடுவதென்பது அவ்வளவு இலேசான காரியமா? எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாவிட்டால்கூட, எவராலும் சங்கர்லாலைக் கொல்ல முடியாது. இறைவனாகப் பார்த்து என்னை அழைத்துக் கொண்டால்தான். பிறரால் எனக்கு என்றைக்குமே மரணம் இல்லை" என்று சொல்லிவிட்டார்!

"இருந்தாலும், எந்த நிமிஷத்திலும், தாங்கள் வேண்டும்போது, சகல பாதுகாப்புகளையும், வசதிகளையும் நாங்கள் செய்துதரத் தயாராய் இருக்கிறோம்" என்று அக்கறையுடன் சொல்லி வைத்தார்கள் அரசாங்கத்தார்.

சங்கர்லால் எப்படி இருப்பார் என்று தெரிய வேண்டாமா? பாதங்களிலே, எந்த இடத்திலும், எப்பொழுதும் சப்தம் செய்யாத, கிரேப் வைத்துப் பெட்ரோலினால் ஒட்டப்பட்ட ஷூ; உடம்பிலே, நீண்ட கால்சட்டை அதற்குள்ளே விடப்பட்ட சட்டை; கழுத்திலே டை; கலைந்து கிடக்கும் தலை; வளர்ந்த சிவந்த மேனி; சிரித்த முகம்; எப்போதும், எதற்கும் கவலைப்படாமல் குஷியாக இருக்கும் குழந்தைத் தன்மை. இவர்தான் சங்கர்லால்!

இதுவரை சங்கர்லால் தலையிட்ட அத்தனைக் கொலை கேஸ்களும் அக்கு வேறு, ஆணி வேறாகக் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. கொலை என்றால் இன்னான் இத்தனை மணிக்கு, இன்ன காரணத்திற்காக, இந்த ஆயுதத்தினால் கொலை செய்திருக்கிறான் என்று சொல்லிவிடுவார். கொள்ளை என்றால் இத்தனை மணிக்கு இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது. இதில் இன்னின்னார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று கச்சிதமாகப் பிசிறு இல்லாமல் சொல்லிவிடுவார்! இவ்வளவு தெளிவாக, அந்தக் கொலையையோ, கொள்ளையையோ நேரில் பார்த்தவர்கள்கூட, இந்த மாதிரிக் குழப்பம் இல்லாமல் தெளிவாகச் சொல்ல முடியாது!

சங்கர்லால், இங்கே இருக்கும் கொலை, கொள்ளை களைத்தாம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்துவிடாதீர்கள். உலகத்திலுள்ள பல நாடுகளிடமிருந்தும் அவரை அனுப்பி வைக்கும்படி அரசாங்கத்திற்குக் கடிதம் வரும். பர்மா, மலேசியா, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, நார்வே, ஸ்வீடன், இத்தாலி - இப்படி முக்கிய நாடுகளிடமிருந்தெல்லாம் அவரை அன்புகூர்ந்து அனுப்பி வைக்கும்படி அரசாங்கத்திற்குக் கடிதம் வருகிறது!

சங்கர்லால், வெளிநாடுகளுக்குச் செல்வதை அதிகமாக விரும்புவதில்லை. மிகவும் பெரிய கேஸாக இருந்தால் மட்டும் தீராத வற்புறுத்தலுக்கு இணங்கி மறுக்க முடியாமல் போவார்.

சங்கர்லாலைப் பற்றித் தெரிந்துகொண்டு விட்டீர்களல்லவா? இனிமேல் கதையைப் படிக்கலாம்.

## அத்தியாயம் - 1

# நிழல் மனிதன்

நிழல்மனிதன் பெரிய திருடன். நிழலை எவராலாவது பிடிக்க முடியுமா? அது மாதிரி, இந்தப் பெரிய திருடனையும் எவராலும் பிடிக்க முடியாது. நிழலைப் பார்க்கலாம்; ஆனால் பிடிக்கத்தான் முடியாது. பெரிய திருடனாகிய இந்த நிழல்மனிதனை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம்; ஆனால் பிடிக்கத்தான் முடியாது! இந்த மகாப்பெரிய திருடனுக்கு நிழல்மனிதன் என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது!

நிழல்மனிதன் வருவதும் தெரியாது. போவதும் தெரியாது. இருப்பதும் தெரியாது. அவன் எப்பொழுது வந்தான்? எதற்காக வந்தான்? எந்த ரூபத்தில் வந்தான்? எப்படி வந்தான்? இப்பொழுது அவன் எங்கே? இருக்கிறானா, போய்விட்டானா? ஒன்றுமே எவருக்கும் தெரியாது! ஆனால், அவன் நுழைந்த கட்டிடத்திற்குள் உள்ள விலை உயர்ந்த சாமான்கள் மட்டும் காணாமற் போய்விடும்! எவ்வளவு பாதுகாப்பு இருந்தாலும், எத்தனை கான்ஸ்டபிள்கள் இருந்தாலும், எத்தனை பூட்டுகள் போட்டுப் பூட்டியிருந்தாலும் சரி, விலை உயர்ந்த சாமான்களோ, கரன்ஸிகளோ கண்டிப்பாய்க் காணாமல் போய்விடும். அதை மட்டும் எவராலும் தடுக்க முடியாது!

நிழல்மனிதன் வீடு எங்கே இருக்கிறது? அல்லது, அவன் அடிக்கடி தங்கும் இடம்தான் எது? அவனுடைய ரகசிய ஜாகை எங்கே இருக்கிறது? அவன் எங்கிருந்து வருகிறான்? எப்படி வருகிறான்? எதில் வருகிறான்? கொள்ளைகள் அத்தனையையும் அவன் மட்டுந்தான் செய்கிறானா? அல்லது, அவனுக்குக் கூட்டாளிகள் உண்டா? கூட்டாளிகள் உண்டு என்றால் அவர்கள் யார்? அவர்கள் ஜாகையெல்லாம் எங்கே இருக்கிறது? அவன் கூட்டாளிகள் அவனோடு சேர்ந்து எல்லோரும் ஒன்றாகத்தான் வசிக்கிறார்களா? இல்லை, தனித்தனியாகத்தான் கௌரவமான மனிதர்கள்போல் நகரத்திற்குள் வசித்துக்கொண்டு ஒருவருக் கொருவர் தொடர்பு வைத்துக் கொள்கிறார்களா?

நிழல்மனிதன் இதுவரை திருடியதையெல்லாம், கொள்ளை யடித்ததையெல்லாம் எங்கே வைத்திருக்கிறான்? அந்த இடம் எங்கே இருக்கிறது? அவன் ஏன் இப்படிக் கொள்ளையடிக்க வேண்டும்? அப்படிக் கொள்ளையடிப்பதையெல்லாம் வைத்திருக்கிறானா? அல்லது கூட்டாளிகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டானா?

அவனுக்கு அப்பா, அம்மா உண்டா? கூடப் பிறந்தவர்கள் யாராவது உண்டா? அவனுக்கு வயது என்ன இருக்கும்? அவன் ஆள் எப்படி இருப்பான்? எவருக்குமே தெரியாது!

நிழ்ல்மனிதனை இதுவரை எவருமே பார்த்ததில்லை. எங்கேயாவது கொள்ளையடிக்கப்பட்டிருந்தால், அது நிழல் மனிதனால் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்வார்களே தவிர, அவன் எப்பொழுது வந்தான், எப்படி வந்தான், எத்தனை பேர்களோடு வந்தான், எப்படிக் கொள்ளையடித்தான், கொள்ளையடித்ததை எப்படிக் கொண்டு போனான் என்பதெல்லாம் எவருக்குமே தெரியாது!

இப்படி, எவருமே பார்த்தறியாத நிழல்மனிதனின் தொந்தரவு, கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்தது.

போலீஸ் இலாகா நிழல்மனிதனைப் பிடிக்கத் தலைகீழாக நின்று பார்த்தது. முடியவில்லை. போலீஸ் கமிஷனரும், டெபுடி போலீஸ் கமிஷனரும், இரவு பகலாகத் தூங்காமல், என்னென்னவோ ஏற்பாடுகளெல்லாம் செய்து பார்த்தார்கள். முடியவில்லை!

இப்படித் தேடித் தேடி, நிழல் மனிதனைப் பிடிக்க முடியாமல் எத்தனையோ மாதங்கள் கழிந்துவிட்டன!

ஒருநாள் -

அப்பொழுதுதான் இருட்டிக் கொண்டிருந்தது.

குளிர்காற்றுச் சற்று அதிகமாக இருந்ததால் வெளியே உலவச் செல்லும் சங்கர்லால், அன்று வெளியே செல்ல விரும்பாமல், தன் அறையில் உட்கார்ந்து கால்கள் இரண்டையும் மேஜையின் மீது தூக்கிப் போட்டுக்கொண்டு ஒரு புத்தகத்தைச் சுவைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது -

அதற்குள் நான் தம்பியின் உடம்பை நன்றாகத் தேற்றிவிடுகிறேன். இப்பொழுதுதான் தம்பியின் உடம்பு கொஞ்சம் பார்ப்பதற்குச் சுமாராய் இருக்கிறது. நீங்கள் இப்பொழுது ஏதாவது வேலை கொடுத்துவிட்டால் இருக்கிற இந்த உடம்பும் கெட்டுவிடும்" என்றான்.

"அது சரியப்பா, நான் எவ்வளவுக்கெவ்வளவு தம்பிக்கு ஓய்வு கொடுக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு ஓய்வு கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். நானும், கமிஷனரும், போலீஸ் இலாகாவும் முடிந்தவரை முயற்சி செய்து பார்த்து, முடியாவிட்டால் கடைசியில் தானே நான் தம்பியிடம் வருகிறேன்! இதற்குமேல் நான் என்ன செய்வது?" என்றார் மிஸ்டர் வஹாப்.

"எங்கே ஸார்! ஒவ்வொரு விஷயத்தையும் தம்பி வந்து கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டியதிருக்கிறது? தம்பி வராமல் நீங்களாக எந்த விஷயத்தைக் கண்டுபிடித்தீர்கள் சொல்லுங்கள் பார்ப்போம்?" என்றான் மாது கொஞ்சம் ஆத்திரமாக.

"மாது என்னடா இது? போடா உன் வேலையைப் பார்த்துக்கொண்டு" என்றார் சங்கர்லால் பொய்க் கோபத்துடன்.

"என்ன தம்பி இது, நான் சொன்னதிலே தவறு என்ன இருக்கிறது? ஒரே மனிதனைப் போட்டு எவ்வளவு காலத்திற்குத்தான் உயிரை வாங்குவது? உன் மாதிரி மூளை உள்ள வேறொரு மனிதன் இந்த உலகத்திலே கிடையாதா என்ன?" என்றான் மாது எரிச்சலோடு!

"கிடையாதே அப்பா. நான் என்ன செய்வது? சங்கர்லால் மாதிரி மூளை உள்ளவர் இந்த உலகத்தில் இல்லை என்றாலும், சங்கர்லால் மூளையில் பாதி உள்ளவர் இருந்தாலும் போதுமே, நான் அவரைப் பிடித்துக்கொண்டு சங்கர்லாலுக்கு ஓய்வு கொடுத்துவிடுவேனே! துரதிர்ஷ்டவசமாய்ச் சங்கர்லால் மூளையில் கால்வாசி மூளை உள்ளவர்கள்கூட இந்த உலகத்தில் இல்லையே. இதற்கு நான் என்ன செய்வது?" என்றார் மிஸ்டர் வஹாப் ஏக்கத்தோடு.

"தம்பி, அப்படியானால் உன் மூளையை மழுங்கடித்துக் கொண்டுவிடு. ஓய்வும் கிடைக்கும். உடம்பும் பெருக்கும்" என்றான் மாது.

கீழே காவல் காத்து நிற்கும் கான்ஸ்டபிள்களில் ஒருவனான பொன்னன், சங்கர்லாலுக்கு எதிரே வந்து ஸல்யூட் ஒன்று போட்டு நின்றான்.

"என்ன பொன்னா?" என்று கேட்டார் சங்கர்லால், தன் பார்வையைப் புத்தகத்திலிருந்து எடுத்து, பொன்னனை பார்த்துக்கொண்டே...

"உதவிப் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் வஹாப் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார். வரச்சொல்ல அனுமதி உண்டா?" என்று கேட்டான் பொன்னன்.

"வரச்சொல்லு. அப்படியே மாதுவிடம் சொல்லி இரண்டு டீ கொண்டுவரச் சொல்லிவிட்டுப் போ" என்றார் சங்கர்லால்.

"ஆகட்டும் ஸார்" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் ஒரு ஸல்யூட் போட்டுவிட்டுக் கீழே போனான் பொன்னன்.

பொன்னன், கீழே போன கொஞ்ச நேரத்திற்குள் உதவிப் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் வஹாப், "வணக்கம், மிஸ்டர் சங்கர்லால்" என்று வணங்கிக்கொண்டே வந்தார். அவருக்குப் பின்னாலேயே மாது, டீயுடன் வந்தான்.

சங்கர்லால், "வாருங்கள், வணக்கம்" என்று மிஸ்டர் வஹாபை வரவேற்றார்.

மிஸ்டர் வஹாப், நாற்காலியின் மீது உட்கார்ந்ததும், மாது, இரண்டு கப் டீயையும் மேஜையின் மீது வைத்தான்.

சங்கர்லால், டீயைக் குடித்துக்கொண்டே, "என்ன மிஸ்டர் வஹாப், சில மாதங்களாக நன்றாக ஓய்வெடுத்துக்கொண்டு நிம்மதியாக இருந்தேன். இப்படியே இன்னும் இரண்டொரு மாதங்கள் கழிந்துவிட்டால் சௌகரியமாய் இருக்கும் என்று நினைத்தேன். அதற்குள்ளே வந்துவிட்டீர்களே" என்று சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தார்.

மிஸ்டர் வஹாப் அதற்குப் பதில் சொல்வதற்காக வாயைத் திறந்தார்.

அதற்குள் மாது குறுக்கிட்டு, "ஆமாம் ஸார், தம்பிக்கு இன்னும் இரண்டொரு மாதங்களுக்கு ஓய்வு கொடுங்கள்.

"சரி சரி போடா. உன் மாதிரி என்னையும் ஆக வேண்டும் என்கிறாயாக்கும்?" என்றார் சங்கர்லால் சிரித்துக்கொண்டே. மிஸ்டர் வஹாப் இதைக் கேட்டுச் சிரித்தார்.

"என் மாதிரி இருப்பவர்களுக்குத்தான் தம்பி ஆயுள் அதிகம்" என்றான் மாது!

"சரி சரி, நீண்ட நாட்கள் உயிருடன் இருப்பா, போ" என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார் மிஸ்டர் வஹாப். சங்கர்லாலும் விழுந்து விழுந்து சிரித்தார்.

மாது, இதுவரையும் முறைத்துப் பார்த்துக்கொண்டே, காலிக் கோப்பைகளை எடுத்துக்கொண்டு கீழே போனான்.

சிரிப்பலைகள் ஓய்ந்ததும், "என்ன மிஸ்டர் வஹாப், என்ன விசேஷம்?" என்று மிஸ்டர் வஹாபைப் பார்த்துக் கேட்டார் சங்கர்லால்.

"நிழல்மனிதன் விஷயமாகத்தான் வந்தேன் மிஸ்டர் சங்கர்லால்" என்றார் மிஸ்டர் வஹாப்.

"ரொம்பப் பெரிய விஷயந்தான்" என்று சொல்லிவிட்டு, மெல்லச் சிரித்தார் சங்கர்லால்.

"சின்ன விஷயமாக இருந்தால்தான் நானே பார்த்துக் கொண்டுவிடுவேனே" என்றார் மிஸ்டர் வஹாப்.

"சரி, சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"நிழல் மனிதனைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்காக நாங்கள் என்னென்னவோ முயற்சிகள் செய்துவிட்டோம் மிஸ்டர் சங்கர்லால். நிழல்மனிதனைக் கண்ணால்கூடப் பார்க்க முடியவில்லை. பார்த்த பிறகு அல்லவா அவனைக் கைது செய்ய வேண்டும்! முதலில் அவனைப் பார்க்க முடியவில்லையே! அவன் எப்படி இருப்பான் என்று தெரிந்தாலாவது தேடிப்பார்க்கலாம். அவன் எப்படி இருப்பான் என்றே தெரியவில்லையே. அவனுடைய அட்டகாசம் வரவர அதிகமாகிவிட்டது. இப்படியே விட்டுக்கொண்டு போனால் போலீஸ் இலாகாவுக்கே ஆபத்து. நீங்கள்தான் பெரிய மனது பண்ணி நிழல் மனிதனைக் கண்டுபிடித்துக் கைது செய்து காப்பாற்ற வேண்டும்" என்று சற்று இரங்கிய குரலில் சொன்னார் மிஸ்டர் வஹாப்.

ஆனால், மிஸ்டர் வஹாபிற்கு ஏனோ சங்கர்லால் மாதிரிச் சிரிக்க வரவில்லை! அதற்குப் பதிலாக அவர் முகம் கருத்தது. உடம்பு வியர்த்தது. ஆனால், இதெல்லாம் வெளியே தெரியாமல் மறைப்பதற்காகக் கொஞ்சம் சிரித்துப் பார்த்துக்கொண்டார்.

கொஞ்ச நேரம் கழித்து "பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு, நிம்மதியுடன் விடை பெற்றுக்கொண்டார் மிஸ்டர் வஹாப்.

ஒரு நாள் -

சாயந்தரம். மணி ஏழு அல்லது ஏழரை இருக்கும். எங்கும் மின்சார விளக்கு வெளிச்சம் நிறைந்திருந்தது. மஸ்டா ஹோட்டல் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த ஹோட்டலிலே நெருக்கம் இல்லாத நாளே கிடையாது. பெரிய பெரிய சீமான்களெல்லாம் போய் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பளபளப்பான பிளஷர் கார்களெல்லாம் வகை வகையாக அந்த ஹோட்டலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தன. அவ்வளவு அமைதியற்ற நிலைக்கு நடுவே -

எதிரிலே இருந்த பிளாட்பாரத்திலே ஒருவன் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தான். அவன் பிச்சைக்காரனா? இருக்கலாம். அவனுடைய கோட்டில் நிறைய ஓட்டைகள்... கால் சட்டையிலே அங்கங்கே ஓட்டைகள்...

அவன் சரியானபடி சாப்பிட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் ஆகின்றன. அவனுக்குப் பசி காதை அடைத்தது. அவனுடைய கண்களெல்லாம் இருண்டு கொண்டு வந்தன. அவன் கோட்டுப் பைகளிலும், மற்றப் பைகளிலும் கையைவிட்டுத் துழாவினான். ஏமாற்றத்தோடு கையை எடுத்துக் கொண்டான். அவன் பைகளிலே -

பணமே இல்லை. கையை முகவாய்க்கட்டையில் முட்டுக்கொடுத்துக் கொண்டு சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான். நெடுநேரம் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்திலே சுருக்கங்கள் நிறைந்து நெளிந்தன. அவன் எதைத்தான் அப்படி யோசனை செய்தானோ?

அவனுடைய பெருங்குடல் சிறுகுடலைத் தின்பது மாதிரி இருந்தது. அவனுக்கு அவ்வளவு பசி! அந்த பசி அவனை விட்டுப் போக வேண்டும். அதற்கு என்ன செய்வது? பிச்சை எடுக்கவா?

சங்கர்லால் சிரித்துக்கொண்டு, "சரிதான், பாரம் முழுவதையும் ஒரேயடியாக என் தலையில் தூக்கிப்போட்டு விட்டீர்கள்! நீங்கள் நினைப்பது மாதிரி நிழல்மனிதனைக் கைது செய்வது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை மிஸ்டர் வஹாப்" என்றார்.

"உண்மைதான். சுலபமான விஷயமாக இருந்தால் உங்களிடம் நான் ஏன் வரப்போகிறேன்?" என்று சொல்லிவிட்டு, தான், நல்ல கருத்துடன் பேசிவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார் மிஸ்டர் வஹாப்.

"சரி, கேலி இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"எவ்வளவு செலவழிந்தாலும் சரி, எப்பாடுபட்டாவது நீங்கள் நிழல்மனிதனைக் கண்டுபிடித்துத் தரவேண்டும். கண்டுபிடித்துத் தந்தால் மட்டும் போதாது; கைது செய்தும் தரவேண்டும்" என்றார் மிஸ்டர் வஹாப்.

"உயிருக்கே அபாயமான வேலை! இருக்கட்டும். நிழல் மனிதனைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த விவரங்களை மட்டும் சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"எனக்கு எந்த விவரமும் தெரியாது மிஸ்டர் சங்கர்லால். நானும், போலீஸ் கமிஷனரும், போலீஸ் இலாகாவும் எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டோம். நிழல் மனிதனை பற்றிய எந்த விவரமும் எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை" என்றார் மிஸ்டர் வஹாப்.

"நிழல்மனிதன் இதுவரை கொலைகள் ஏதாவது செய்திருக்கிறானா?" என்று கேட்டார் சங்கர்லால்.

"இல்லை. இதுவரை அவன் ஒரு கொலைகூடச் செய்ததில்லை. அவன் வெறும் திருடன்தான். ஆனால், தனக்கு இடைஞ்சலாக இருப்பவர்களைக்கொலை செய்தே தீருவான்" என்றார் மிஸ்டர் வஹாப்.

"ஐயோ, அப்படியானால் நீங்களும் நானும்தான் இன்றிலிருந்து அவனுக்கு இடைஞ்சலாக இருக்கப்போகிறோம்" என்று சொல்லிவிட்டுக் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, உயிருக்குப் பயப்படுவதுபோல் பாவனை செய்துவிட்டுப் பிறகு, வாய்விட்டுச் சிரித்தார் சங்கர்லால்.

அவனுடைய மல்லன் போன்ற உருவத்தைப் பார்த்த பிறகு யார்தான் பிச்சை போடுவார்கள்? அவனுடைய பரந்த மார்பையும், உருண்டு திரண்ட கைகால்களையும் பார்க்கும்போது, அவன் ஒருவனே நாலைந்துபேரை அடித்துச் சாய்த்துவிடுவான் என்றுதான் தோன்றும்!

அந்தக் கந்தல் ஆடைக்காரன் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவனைப் போல் அங்கிருந்து எழுந்தான். சுற்று முற்றும் இருப்பவர்களைக் கவனித்தான். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்று தெரிந்துகொண்டபின் அங்கிருந்து முன்னாலிருந்த ஹோட்டலை நோக்கிப் போனான். அவன் ஹோட்டலுக்குள் நுழைந்தான். வாசலிலேயே நின்றுகொண்டு, ஹோட்டலுக்குள் இருந்தவர்களையெல்லாம் ஒரு முறை பார்த்தான். பிறகு, காலியாக இருந்த ஒரு மேஜைக்கு முன்னால் போய் உட்கார்ந்தான். அந்த மேஜையில் அவனைத்தவிர வேறு ஆட்களே இல்லை.

அப்படியே சாய்ந்துகொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டான். புதிதாக அந்த ஓட்டலுக்குச் சாப்பிட வந்த எவரும் அவனுக்குப் பக்கத்திலே போய்க்கூட உட்காரவில்லை. அவனுடைய பயங்கரமான பெரிய தோற்றத்தைக் கண்டு அவர்கள் பயந்தார்களோ, என்னவோ!

அந்தக் கந்தலாடைக்காரனுக்குப் பக்கத்திலே துணிந்த சர்வர் ஒருவன் போய் நின்றான். "ஸார் உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"என்ன இருக்கிறது?" என்று கேட்டான் அவன்.

சர்வர் ஹோட்டலில் இருப்பதையெல்லாம், ஏற்கெனவே மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். அதை அப்படியே அவனிடம் கிடுகிடுவென்று ஒப்பித்தான்.

அந்தக் கந்தலாடைக்காரன் ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டே, கொஞ்சம்கூடப் பதறாமல், "இப்பொழுது சொன்னாயே, அவ்வளவையும் கொண்டுவா" என்றான்! அவன் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

சர்வர், திகைத்துப் போய்விட்டான். அந்தக் கந்தலாடைக் காரனை ஒருமுறை ஏற இறங்கக் கவனித்தான். தயங்கி நின்றான். ஆனால், அந்தக் கந்தலாடைக்காரன் முகத்தைக் கொஞ்சம்

கடுமையாக வைத்துக்கொண்டு "ஏனய்யா நிற்கிறீர் நான்தான் சொல்லிவிட்டேனே, கொண்டு வாயேன்" என்று உறுமினான்.

இதைக் கேட்டதும், சர்வர் துள்ளிக் குதித்துக்கொண்டு அங்கிருந்து பறந்தோடிப் போனான்.

கொஞ்ச நேரத்தில் அந்த ஹோட்டலில் இருந்த பலகார வகைகளையெல்லாம் அந்த மனிதனுக்கு முன் இருந்த மேஜை நிறையப் பரப்பி வைத்துவிட்டான் சர்வர். அந்தக் கந்தலாடைக்காரன் இரண்டு கைகளாலும் எதிரில் இருந்த பலகாரங்களையெல்லாம் எடுத்து விழுங்கினான். கோழி, தவிடு விழுங்குகிற மாதிரி இருந்தவற்றையெல்லாம் உள்ளே தள்ளித் தண்ணீர் குடித்தான். பெரியதாக ஏப்பம் விட்டான்!

சர்வர், பில்லைக் கொண்டுவந்து மேஜையின் மேல் வைத்தான். பில், ஏழு ரூபாய்க்கு ஆகி இருந்தது! அதைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்புதான் வந்தது. அவனை அடித்துப்போட்டால்கூட அவனிடம் ஏழு பைசா கிடையாது. அவன் ஏழு ரூபாய்க்கு எங்கே போவான்? அவன் பில்லைக் கையிலே வைத்துக்கொண்டு, அதைப் பலவிதமாக மடித்து அழகு பார்த்துக்கொண்டிருந்தான்! அந்தப் பில்லுக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்பதைப் பற்றி தீவிரமாக யோசனை பண்ணிக் கொண்டிருந்தான்.

இரவு மணி எட்டரை!

அந்தக் கந்தலாடைக்காரன், ஹோட்டலிலேயே இருந்தான். அவன், தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. அவன் கையிலே பலவிதமாக மடித்து வைத்துக் கொண்டிருந்த பில்லைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

அப்பொழுது இரவு மணி ஒன்பது!

அந்தக் கந்தலாடைக்காரனால் இன்னும் மேற்கொண்டு எந்தவகையான முடிவுக்கும் வர முடியவில்லை. அவன் சுற்று முற்றும் பார்த்தான். அவனை இரண்டொருவர் கவனித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. அவன் மாடி வழியாக கவனித்தான். மாடிப்படிகளின் வழியாக -

ட்வீட்கோட்டும், சட்டையும் போட்டுக்கொண்டிருந்த ஒரு பெரிய மனிதர் கீழே இறங்கி வந்துகொண்டிருந்தார். அவருடைய

பார்வை முழுவதும் அந்தக் கந்தலாடைக்காரன் மேலேயே வேரூன்றி நிலைத்து நின்றுவிட்டிருந்தது. அவர், ஏன் தன்னை இப்படி உற்றுப் பார்க்கிறார்? ஒருவேளை, தன்னைப்பற்றி அவருக்குத் தெரிந்துவிட்டிருக்குமோ என்ற சந்தேகம் அவனுக்கு!

அந்தப் பெரிய மனிதர் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தார். அந்தப் பெரியமனிதர் எதற்காகவோ வந்திருக்கிறார்; எங்கேயோ போய் உட்காருவார் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். ஆனால் -

அவர், அவன் மேஜைக்கு எதிரிலேயே வந்து உட்கார்ந்தார். அவனுக்கு அது கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. அவன் கட்டாயப்படுத்தித் தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

அந்தப் பெரிய மனிதர் போகவில்லை; பேசவில்லை.

அந்தக் கந்தலாடைக்காரன், அவரைத் திரும்பிப் பார்த்தான். அவர், தன் கோட்டுப் பைக்குள் கையை விட்டுப் பர்ஸை எடுத்தார். அவன் ஒன்றும் புரியாமல் அந்தப் பெரியவரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவருடைய செய்கை அவனுக்குப் புதிராக இருந்தது.

அவர், பர்ஸிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தார். அந்தக் கந்தலாடைக்காரனிடம் நீட்டினார். அவன் மனம் குழம்பியது.

"இது... இது..." - அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாமல் அவன் வாய் திக்கியது.

அவர் சிரித்தார். கட்டாயப்படுத்தி அந்தப் பத்து ரூபாய் நோட்டை அவன் கையில் திணித்துக்கொண்டே, "ஏன் அதிர்ச்சி அடைகிறாய்? எனக்குத் தெரியும். இது பத்து ரூபாய் நோட்டுத்தான். உனக்குத்தான் கொடுக்கிறேன். நீ இதுவரை சாப்பிட்டதற்குச் சர்வர் பில் கொடுத்திருக்கிறான். அதற்குப் பணம் கொடுக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்தப் பணம். இதை எடுத்துக்கொண்டு போய்ப் பில்லுக்குப் பணம் கொடு" என்று பரிவோடு சொன்னார்.

நிழல்மனிதன் உடனே உஷாராகிவிட்டான். அவன் பதுங்கியபடி உட்கார்ந்துகொண்டு, எட்ட இருந்தவரைப் பக்கத்தில் வரும்படி சைகை செய்தான். அந்தப் பெரிய மனிதரும் நாற்காலியை இழுத்து அவனுக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டு, அவன் காதோடு பேச ஆரம்பித்தார். நடுநடுவே நிழல் மனிதனின் கண்கள், சுற்றி இருப்பவர்களில் தன்னை யார் யார் எல்லாம் கவனிக்கிறார்கள் என்பதை அளவெடுத்துக் கொண்டிருந்தன.

அப்போது யாரோ அவர்களைக் கவனிப்பதுபோலத் தோன்றியது. உடனே அவன், அந்தப் பக்கமாக வந்த சர்வரிடம், "இந்தாப்பா சர்வர். இரண்டு பாதாம்கீர் கொண்டுவா" என்றான்.

சர்வர், பாதாம்கீரைக் கொண்டுவந்து வைத்ததும், நிழல்மனிதன், எதிரில் இருந்த பெரிய மனிதரை எடுத்துக்கொள்ளும்படி சைகை செய்தான். அந்தப் பெரிய மனிதர் நிழல்மனிதனின் நுணுக்கமான ஆராய்ச்சியை மெச்சியபடி ஒரு கிளாஸை எடுத்துக்கொண்டு, பாதாம்கீரைச் சுவைத்துக்கொண்டே பேச ஆரம்பித்தார். நிழல்மனிதனும் மீதியுள்ள இன்னொரு டம்ளரை எடுத்துக்கொண்டே அவர் பேசுவதைக் கவனமாகக் கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர் நிழல்மனிதனுக்கு மட்டும் கேட்கும்படியான குரலில், "நிழல்மனிதா, கொஞ்சம் கவனமாகக் கேள். நான் இப்போது ஒரு பெரிய ஆபத்திலே சிக்கிக் கொண்டிருக்கிறேன். வெளியே சுற்றிக் கொண்டிருக்கிற போலீஸ்காரர்களெல்லாம் எனக்காகத்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதற்குப் பயந்துதான் இந்த ஹோட்டலிலேயே ஒரு வாரமாகத் தங்கி இருக்கிறேன். நான் இந்த ஹோட்டலில்தான் தங்கி இருக்கிறேன் என்பதை இவர்கள் எப்படியோ தெரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் எப்படியும் மிகவும் சீக்கிரமாக இந்த ஹோட்டலைவிட்டு வெளியேற வேண்டுமானால் அதற்கு உன்னுடைய உதவி தேவை. நீ ஒருவன்தான் என்னைப் பத்திரமாக வெளியே கொண்டுபோய்ச் சேர்க்க முடியும். உனக்கு ஒருவனுக்குத்தான் அந்தத் திறமை உண்டு. உன்னைத்தான் நான் பெரிதும் நம்பி இருக்கிறேன். நீ என்னை மோசம் செய்யமாட்டாய் என்று நம்புகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

இதைக் கேட்டதும், அந்தக் கந்தலாடைக்காரனின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன. "பில்லுக்குப் பணம் கொடுக்க என்னிடம் பணம் இல்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டான்.

அதற்கு அவர் ஒருமாதிரியாகச் சிரித்துக்கொண்டே, "உன்னிடம் பில்லுக்குப் பணம் இல்லை என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும் என்று நினைக்காதே, நீ யார் என்பதுகூட..." என்று நீட்டினார்.

அதற்குள் அவன், அவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, கொஞ்சம் பயந்த குரலில், "நான் யார் என்பதுகூட...?" என்று கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர், குரலைக் கொஞ்சம் தாழ்த்திக் கொண்டு, "ஆமாம், நீ யார் என்பதுகூட எனக்குத் தெரியும். நீ, நிழல்மனிதன்" என்றார்!

அந்தக் கந்தலாடைக்காரன் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதனால் ஏற்பட்ட தாக்குதலை சமாளிப்பது அவனுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. அவன் கொஞ்ச நேரம்வரை ஒன்றுமே பேசவில்லை. சட்டென்று எழுந்து நின்று வெளியில் கவனித்தான். வெளியே சிவப்புத் தொப்பிக்காரர்கள் நிறையப் பேர்கள் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்று கொண்டிருந்தார்கள். அங்குமிங்குமாகச் சுற்றிப் பாரா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் தன்னைப் பிடிக்கத்தான் என்பது அவனுடைய எண்ணம். அப்படியானால் எதிரில் இருக்கும் இந்தப் பெரிய மனிதர்? -

இவர் நம்மைப் பிடிக்கத்தான் இப்படியெல்லாம் வேஷம் போட்டு விசாரிக்கிறார் என்று நினைத்தான் நிழல்மனிதன். அவனுக்கு அது -

அந்தப் பெரிய மனிதர் அவன் காதோடு காதாக, "நிழல் மனிதா, நீ அதிர்ச்சி அடையாதே. பரபரப்புக்காட்டாதே. சத்தியமாகச் சொல்லுகிறேன். என்னை நீ சந்தேகிக்காதே. என்னால் உனக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. நீ நிம்மதியாக இரு. விஷயத்தைச் சொல்லுகிறேன்" என்றார்.

நிழல்மனிதன் கொஞ்சநேரம் யோசித்துவிட்டு, "நீங்கள் ஒருவாரம் வரை இந்த ஹோட்டலிலேயே மறைந்திருந்ததைப் போல் இன்னும் இரண்டு நாட்களுக்கு நாம் இரண்டு பேருமே இந்த ஹோட்டலுக்குள் மறைந்து இருக்கலாமே. அப்புறம் வேண்டுமானால் இரண்டு பேருமே தப்பித்துக்கொண்டு போய்விடலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர் உதட்டைப் பிதுக்கிக் காட்டிவிட்டுத் தலையை ஆட்டிக்கொண்டே கைக்கடிகாரத்தைப் பார்த்தார். பிறகு பதட்டத்தோடு, "நிழல்மனிதா, நீ மிகவும் திறமைசாலி. இப்போது மணி ஒன்பதரை. இன்னும் அரைமணி நேரத்திற்குள் நான் இங்கிருந்து வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் கம்பி எண்ணத்தான் வேண்டும். நிழல்மனிதா, எப்படியாவது என்னைக் காப்பாற்று. உன்னை உயிர் உள்ளவரை மறக்கமாட்டேன். என்னைக் கைவிட்டுவிடாதே" என்று கெட்டியாக அவன் கையைப் பிடித்துக் கொண்டார்.

நிழல் மனிதனின் நெற்றியில் சுருக்கங்களும், நெளிவுகளும் மிதந்தன. கொஞ்சம் கொஞ்சமாக அவன் முகத்திலே ஒளி பரவியது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் முகம் கடுமையாக மாறியது. அவன், "உங்களுக்குக் கார் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இருக்கிறது. வெளியே நிற்கிற பியூக் என்னுடையதுதான்" என்றார் அவர்.

"ஓகோ" என்று தலையை ஆட்டிவிட்டு, விசுக்கென்று எழுந்தான் நிழல்மனிதன்.

பிறகு, தன் கோட்டுப் பையிலிருந்து ஏதோ ஒரு அட்டையை எடுத்துக் கோட்டில் குத்திக் கொண்டான்.

நிழல் மனிதன் அவரைக் கண்டு அனாயாசமாகச் சிரித்துக் கொண்டே, "ஸார், நீங்கள் எதற்கும் பயப்படாதீர்கள், நான் முன்னால் போகிறேன். எனக்குப் பின்னால் நீங்கள் ஒளிந்துகொண்டே வாருங்கள். என்னை ஏதாவது செய்த பிறகுதான் உங்களைத் தொடமுடியும்" என்று சொல்லியபடியே, தன் பக்கவாட்டுப் பைகளில் இரண்டு கைகளையும் விட்டான்.

அவன் கைகளை வெளியே எடுத்தபோது, இரண்டு கைகளிலும் இரண்டு துப்பாக்கிகள் இருந்தன! அவன் இரண்டு

உடனே, அந்தப் பெரிய மனிதர், தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தன் பைக்குள் போட்டுக்கொண்டு, போலீஸ்காரனிடம் நெருங்கி வந்து, அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தார்.

போலீஸ்காரன், துப்பாக்கியை நழுவவிட்டான். அது மட்டுமா? அவன் ஆடிக்கொண்டே நின்றான். பெரிய மனிதர் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தபடி, மறுபடியும் நிழல் மனித னுக்குப் பின்னால் வந்து மறைந்து கொண்டார். நிழல் மனிதன் முன்னேறினான்.

வாசலுக்கு வெளியே, சப்-இன்ஸ்பெக்டர் கைத்துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் எந்தவிதமான முயற்சியும் செய்யாமல், அசையாமல் நின்றார். அவர் முதலில் சுடுவதற்காகத் துப்பாக்கியைத் தூக்கினார். நிழல்மனிதன் நெஞ்சில் தொங்கும் அட்டையைப் பார்த்ததும், அவர் கையிலிருந்த துப்பாக்கி, தானாகவே கீழே விழுந்தது.

நிழல் மனிதன் மெல்ல சப்-இன்ஸ்பெக்டரைத் தாண்டி வெளியே வந்தான். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதரும் வந்தார். அதற்குள் -

ஹோட்டலில் இருந்தவர்களெல்லாம் பரபரப்புடன் எழுந்து நின்றார்கள். இரண்டொருவர் ஆளுக்கொரு பக்கம் ஓடிப்போய் போலீஸுக்குப் போன் செய்தார்கள். அங்கே நிற்பவர்களெல்லாம், அவர்கள் கண்களுக்குப் போலீஸாகத் தெரியவில்லை!

நிழல்மனிதன், பாதை ஓரத்தில் நின்ற பியூக் காருக்கு அருகில் வந்து நின்றான். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதரும் வந்து நின்றார்.

நிழல் மனிதன் மெல்லக் கழுத்தைத் திருப்பிப் பின்பக்கமாகப் பார்த்தான். அந்தப் பெரிய மனிதர் அவன் முதுகுப் பக்கமாக ஒட்டிக் கொண்டிருந்தார். அவர், அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதையே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நிழல்மனிதன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, அவருக்கு மட்டும் கேட்கிற மாதிரி, "நீங்கள் காருக்குள்ளே ஏறி, டிரைவர் ஸீட்டிலே உட்காருங்கள்" என்று கட்டளை இட்டான்.

அந்தப் பெரிய மனிதரும் வேறொன்றும் பேசாமல், டிரைவர் ஸீட்டிலே தயங்கியபடியே ஏறி உட்கார்ந்தார்.

கைகளிலும் துப்பாக்கியை ஏந்திப் பிடித்துக்கொண்டு ராஜமோடியாக முன்னால் நடந்தான். அந்தப் பெரிய மனிதரும் அவனுக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி வந்தார். அவரும், தன் பக்கவாட்டுப் பையில் கையைவிட்டார். கைத்துப்பாக்கியோடு மெதுவாக கையை வெளியே எடுத்தார்.

அப்போது -

எதிரே ஹோட்டல் வாசலில் நீட்டிய துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரன், துப்பாக்கியைத் தூக்கி நிழல் மனிதனைச் சுடப்போனான்.

ஆனால் அடுத்த நிமிஷம் -

அவன் துப்பாக்கி தொங்கியது. நிழல்மனிதன் நெஞ்சில், 'நான்தான் நிழல்மனிதன்' என்று தொங்கிய சீட்டு அவன் துப்பாக்கியைத் தொங்கவைத்துவிட்டது. அவன் கண்கள், நிழல்மனிதன் நெஞ்சில் தொங்கும் சீட்டையே பார்த்துக் கொண்டிருந்தன. தனக்கு எதிரே நிழல் மனிதன் நீட்டிய துப்பாக்கியுடன் நிற்கிறான் என்று தெரிந்தவுடனேயே, அவனுக்கு தன் கையில் இருப்பது துப்பாக்கி என்பதுகூட நினைவுக்கு வரவில்லை. அவன் உடம்பு ஆடியது! அவன் என்ன செய்வான். நிழல்மனிதனைப் பற்றி அவன் கேட்ட வதந்திகளும், பயங்கரமான சம்பவங்களும்தாம் அதற்குக் காரணம்!

நிழல்மனிதன் ராஜமோடியாக முன்னால் நடந்தான். என்ன நெஞ்சுத் துணிவு அவனுக்கு! ஒரு குண்டு அவன் உடம்பில் நுழைந்தாலும் போதுமே!

போலீஸ்காரர்களும், சப்-இன்ஸ்பெக்டரும் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்று கொண்டிருப்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. எதிரிகளிடம் இருப்பதெல்லாம் வெறும் தடிகள் மாதிரியும், தன் கையில் இருப்பதுதான் துப்பாக்கி என்றும் நினைத்துக் கொண்டிருந்தான் நிழல்மனிதன். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதர் அவன் முதுகுக்குப் பின்னால் மறைந்துகொண்டே வந்தார்.

நிழல்மனிதன், போலீஸ்காரனுக்கு அருகில் வந்ததும், கழுத்தை இலேசாகத் திருப்பிப் பின்னால் வரும் அந்தப் பெரியவரிடம், "இந்தப் போலீஸ்காரனிடம் இருக்கும் துப்பாக்கியைப் பறியுங்கள்" என்றான்!

நிழல்மனிதன், கம்பீரமாகச் சுற்றியிருந்தவர்களையெல்லாம் கவனித்தான். அவர்களெல்லாம் இன்னும் பழைய நிலையிலேயே வெலவெலத்துப் போய்க் கிடந்தார்கள். நிழல்மனிதன், கண்களை உருட்டி விழித்து, அவர்களையெல்லாம் முறைத்துப் பார்த்துக் கொண்டே, டிரைவர் ஸீட்டுக்குப் பக்கத்திலே ஏறி உட்கார்ந்தான். அப்போதும் அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் பிணம் போலத்தான் இருந்தார்கள். அசையவில்லை.

நிழல்மனிதன், அவனுடைய ஏந்திய துப்பாக்கியை இன்னும் இறக்கவில்லை. அவன் அசட்டையாகப் பக்கத்திலே இருந்த பெரிய மனிதரைக் கவனித்தான். அவர் திகைத்துக் கொண்டிருந்தார்.

நிழல்மனிதனுக்கு அவர் நிலையைக் கண்டதும் இலேசாகச் சிரிப்பு வந்தது. அவன் அதை அடக்கிக் கொண்டே, முழங்கையால் அவர் தோளை இலேசாக இடித்தபடி, "உங்களால் எவ்வளவு வேகமாகக் காரை ஓட்ட முடியுமோ, அவ்வளவு வேகமாகக் காரை ஓட்டுங்கள். நீங்கள் எவருக்காகவும், எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை" என்றான்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதர் ஸ்டியரிங்கை அழுத்திப் பிடித்தார்.

அவ்வளவுதான், பியூக் ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு அங்கிருந்து கிளம்பியது. பாதையிலே படிந்திருந்த புழுதியை வாரிவிட்டுக் கொண்டு அதற்கு நடுவிலே பறந்துபோனது பியூக்.

நிழல்மனிதன், காருக்குப் பின்பக்கமாக இருந்த கண்ணாடியின் வழியாகப் பின்னாலே கவனித்துக் கொண்டு வந்தான். பின்னால் -

எங்கேயோ இருந்து ஒரு கார் வந்து அந்த ஹோட்டலுக்கு முன்னால் நின்றது. அது என்ன கார் என்று கவனித்தான் நிழல்மனிதன். சந்தேகமில்லை. அது போலீஸ் காரேதான்!

இவ்வளவு சீக்கிரமாக போலீஸ் கார் எப்படி அந்த ஹோட்டலுக்கு முன் வந்து நிற்கமுடியும்? ஹோட்டலிலே இருந்தவர்கள் போன் செய்தார்களே, அதைக் கேட்டு இந்தப் போலீஸ் கார் அங்கே வந்திருக்க முடியாது. தற்செயலாக அந்த வழியாக வந்த கார்தான் அங்கே வந்து நின்றிருக்க முடியும். அந்தக்

கார் அங்கு வந்து நின்றதும், அங்கே நின்று கொண்டிருந்த போலீஸ்காரர்களெல்லாம் எகிறிக் குதித்து அந்தக் காருக்குள் ஏறிக் கொண்டார்கள். அவர்களெல்லாம், தான் ஏறிப்போகின்ற பியூக்கைக் காட்டிப் பேசிக்கொண்ட ஜாடை, அவனுக்கு மிக மிக நன்றாகப் புரிந்தது.

அவன் அந்தப் பெரிய மனிதரை இன்னும் வேகமாகக் காரை ஓட்டச் சொன்னான். பியூக் சிட்டாய், பஞ்சாய்ப் பறந்தது.

அந்தப் பாதை, வளைவு நெளிவு இல்லாமல் நேராக இருந்ததால், அந்தப் பாதையில் நெடுந்தூரம் வரை என்ன நடக்கிறது என்பதை நிழல் மனிதனின் கூர்மையான கண்கள் கவனித்துக் கொண்டுதான் வந்தன. தூரத்திலே இருந்த அந்தப் போலீஸ் கார், பியூக்கைத் துரத்திக் கொண்டு விடாமல் தொடர்ந்து வந்தது.

பியூக், முழு வேகத்தில் பறந்தது. ஏறக்குறைய அதே வேகத்தில் போலீஸ் காரும் துரத்தியது.

நிழல்மனிதன் துப்பாக்கியை அழுத்திப் பிடித்தான்.

அந்தப் பெரிய மனிதரிடம் இன்னும் வேகமாக ஓட்டும்படி உற்சாகப்படுத்தினான். முன் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்க அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் முன் ஸீட்டைத் தாண்டிக்கொண்டு பின் ஸீட்டுக்குப் போனான். அந்தப் பின்பக்கத்துக் கண்ணாடியிலேயே அவன் கண்கள் புதைந்துவிட்டிருந்தன. அதை ஊடுருவி, வெளியே அந்தப் பாதையிலேயே அவன் பார்வை நிலைத்திருந்தது.

போலீஸ் கார், பியூக்கை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதன் வேகம் அதிகரித்தது. போலீஸ் கார் பியூக்கை நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் பெரிய மனிதரும், அவரால் முடிந்தவரை வேகமாகக் காரை ஓட்டினார். இனியும் வேகமாக யாராலேயும் அந்தக் காரை ஓட்ட முடியாது. இதற்கு மேலும் வேகமாகப் போனால் பியூக் தலைகுப்புறக் கவிழ்ந்து உருண்டு விழுந்து எரிந்துவிட வேண்டியதுதான்! அவ்வளவு வேகமாகத் தன் முழுத் திறமையோடு காரை ஓட்டினார் அவர்.